[6th March 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : "கிங்க்ஸ் இன்ஸ்டிட்யூட்" டில் தண்ணீரை பரிசோதனை செய்கிறார்கள். அதுதான் நமக்கு அவசியம். வாட்டர் டிவைனரைப்பற்றிய பிரச்னையே இல்லை.

* 215 *Q.*—SRI S. LAZAR AND SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Tiruchirappalli Municipality has submitted any proposal regarding drinking water-supply; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under examination in consultation with the Municipal Council, Tiruchirappalli.

SRI S. LAZAR : எந்தெந்த கிணறுகளில் தண்ணீர் சப்ளை செய்ய இருந்தது. அவைகளில் எவ்வளவு இப்பொழுது வேலை செய்யவில்லை. இரவு நேரங்களில் 12 மணி முதல் 1 மணி வரை சில பகுதிகளில் ஜனங்கள் விழித்திருந்து தண்ணீர் பிடிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு இடைக்கால நிவாரணம் ஏதாவது சர்க்கார் செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முனிசிப்பாலிட்டி அதை எப்படி சமாளிக்கப் போகிறார்கள் என்று கேட்டிருக்கிறோம். பதில் வந்தவுடன் சொல்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : முனிசிப்பாலிட்டி என்ன திட்டம் அனுப்பி இருக்கிறார்கள். எப்பொழுது அனுப்பினார்கள். எவ்வளவு காலமாக அது சர்க்கார் காரியாலயத்தில் இன்னும் முடிவு எடுக்கப் படாமல் இருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஒரு திட்டம் 41 லட்சத்தி 81 ஆயிரம் ரூபாய். இது வந்து ஸ்பில்ஓவர் ஸ்கீம் ஜாபிதாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் முதல் ஸ்டேஜில் 28 லட்சத்தி 91 ஆயிரம் ரூபாய் செலவாகும். அதையாவது எடுத்துச் செய்யலாம் என்று இப்பொழுது சீப் என்ஜினியர் அதற்காக அட்மினிஸ்ட்ரேட்டிவ் சாங்க்ஷன் கேட்டிருக்கிறார். அதையொட்டி நாங்கள் முனிஸிப்பாலிட்டியைக் கேட்டிருக்கிறோம். எப்படி அவர்கள் இந்தப் பொறுப்பை எடுத்துச் செய்ய திட்டமிட்டிருக்கிறார்கள் என்று கேட்டிருக்கிறோம். இன்னும் பதில் வரவில்லை.

* 216 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of Sri K. R. VISWANATHAN) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Superintending Engineer, Tiruchirappalli Circle has withheld the payment of baling out charges to contractors in the case of rural water-supply wells; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) In the case of certain rural water-supply works in the Tiruchirappalli district, the payment of baling charges was deferred by the Collector of Tiruchirappalli, as there was some doubt about the admissibility of the charges.